# சமூக பொருளாதார நிலை பற்றிய ஆய்வு: திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிப் பிரதேசசெயலாளர் பிரிவினை மையப்படுத்தியது.


ஆய்வுச்சுருக்கம்

ஒரு சமூகப் பொருளாதார நிலை பற்றிய ஆய்வு சமூகக் காரணிகள், பொருளாதாரக் காரணிகள் என்பவற்றைக் கண்டறிந்து அவற்றின் வளர்ச்சிப்போக்கு பற்றி அவதானிப்பதன் மூலமே அறிய முடியும். இவ்ஆய்வின் பிரதான நோக்கம் இப்பிரதேசத்தின் சமூக பொருளாதார நிலையினையும், சமூக பொருளாதார நிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளையும் கண்டறிவதன் மூலமாக பொருத்தமான தீர்வினை முன்வைத்தல் ஆகும். இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத் தகவல்களை அடிப்படையாக வைத்து ஆய்வு செய்யப்படுவதுடன் இங்கு பெறப்பட்ட தரவுகள் புள்ளிவிபரணவியல் அணுகுமுறை மூலம் ஆய்வு செய்யப்படுகின்றது. இவ் வாய்வில் சமூகக் காரணிகளில் கல்வியை நோக்கும் போது 52.7 வீதமான பெற்றோர் கல்வியறிவற்றோராகக் காணப்படுவதால், பாடசாலை இடைவிலகல் வீதம் அதிகமாகக் காணப்படுதல் கல்வி நிலை குறைவைக் காட்டுகின்றது. இப்பிரதேசத்தில் வீட்டுவசதி 78.7 வீதத்தினர் சொந்த வீட்டினைக் கொண்டிருப்பது போதுமாகக் காணப்படினும் இன்றும் சிலர் தகர வீடுகளிலும் தற்காலிகக் கொட்டில்களிலும் வாழ்கின்ற நிலைமை காணப்படுகின்றது. மின்சாரம் வசதியுடையோர் 93.3 வீதமாகவும், போக்குவரத்து, சுகாதார வசதிகள், தொலைத் தொடர்பு வசதிகளையுடையோர் 96.3 வீதமானவர்களாகவும் காணப்படுகின்றமை இவ்வசதிகள் ஓரளவிற்கு போதுமாகக் காணப்படுவதைக் காட்டுகின்றது. பொருளாதார காரணிகளில் வருவாய் நிலையினை எடுத்து நோக்குவோமாயின் இங்கு அதிகளவில் குறைந்த வருமானத்தையே பெறுகின்றனர். வருமானமானது ரூபா 5000 கீழ் வருமானம் பெறுபவர்கள் 22.7 வீதமாகவும், ரூபா 5001-10000 இடையிலான வருமானம் பெறுபவர்கள் 26.7 வீதமாகவும் காணப்படுகின்றனர். சேமிப்புள்ளவர் 59 வீதமாகவும் கடன் பெறுவோர் 35.7 வீதமாகவும் முதலீடு 18.7 வீதமாகவும் காணப்படுதலானது பொருளாதாரக் காரணிகள் குறைவாக உள்ளதைக் காட்டுகின்றது.



திறவுச் சொற்கள் - சமூகக் காரணிகள், பொருளாதாரக் காரணிகள், வாழ்க்கைத்தரம்